# வரலாறு தரம் 10

## அலகு – 4

## பண்டைய சமூகம்




எமது நாட்டின் வரலாற்றை நன்கு விளங்கிக்கொள்வதற்கு எமது பண்டைய சமூகத்தினரின் வாழ்க்கை முறை பற்றிய தகவல்களையும் அறிந்திருத்தல் அவசியமாகும். அவ்வாறான தகவல்களை வரலாற்று மூலாதாரங்களின் ஊடாக அறிந்துகொள்வதே இந்த அலகின் நோக்கமாகும்.


தேர்ச்சி : கடந்தகால அனுபவங்களின் மூலம் தற்காலத்திற்கான முன்மாதிரியைப் பெறுவார்.

தயாரிப்பு : திருமதி M.N.S நிfபாரா

கே/தெஹி/ அல் அகீல் மு.ம.வி


பண்டைய சமூகம்
நிர்வாக அமைப்பு
பொருளாதாரம்
கலாசாரம்
சட்டம்
நிர்வாகம்
நீதி
வைத்தியத் துறை
வெளியுறவு
விவசாயம்
சேனை
நெல்
மந்தை வளர்ப்பு
வர்த்தகம்
உள் நாடு
வெளி நாடு
கைத்தொழில்
மட்பாண்டம்
உலோகம்
ஆபரணம்
நெசவு
தந்தச் செதுக்கல்
ஏனைய தொழில்கள்
ஆசிரியர்
வைத்தியர்
வழக்கறிஞர்
கலைஞர்கள்
பௌத்த சமயம்
ஏனைய சமயங்கள்
இந்து
கிறிஸ்தவம்
இஸ்லாம்
கல்வி
இலக்கியமும் இரசனையும்
இனங்களுக்கு இடையிலான இணக்கப்பாடு

# நிர்வாக அமைப்பு



- சட்டத்துறை
- நிர்வாகத்துறை
- நீதித்துறை
- வைத்தியத் துறை
- வெளிநாட்டுத் தொடர்பு

உரு 4.1. கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றில் காணப்படும் குறியீடுகளாகும். விசிறி அடையாளத்தின் மூலம் அரசின் குறியீடான செங்கோலும் கொடி போன்ற அடையாளத்தின் மூலம் அன்னமும் காட்டப்பட்டுள்ளன. அன்னக் குறியீடு வழங்கப்பட்ட கொடுப்பனவின் தூய்மையையும் மேலேயுள்ள சந்திரப்பிறை வழங்கப் பட்ட கொடுப்பனவுக்குரிய, சூரிய, சந்திரன் உள்ள வரையிலான நிலைத்த தன்மையைக் குறிக்கின்றது. நாயும் காகமும் குறியீடு, இக்கொடுப்பனவுக்கு இடைஞ்சல் புரிவோர் அடுத்த பிறவியில் எடுக்கும் பிறப்புகளை மறைமுகமாகக் காட்டுகின்றது.



**சட்டத்துறை** → சட்டம் இயற்றும் நிறுவனம்

↓

பண்டைய காலம் - சட்டம் + நிர்வாகம் + நீதி = **அரச சபை**

தற்காலம் - சட்டம் + நிர்வாகம் + நீதி = **அரசாங்கம்**

**நிர்வாகத்துறை** → **அரசனே அதிகாரம் மிக்கவன்**

**சட்டம் + நிர்வாகம் + நீதி அரசனாலேயே மேற்கொள்ளப்பட்டது.**
**(வத்ஹிமியன் வஹன்சே வதால – அரசனின் ஆணைப்படி –**

**(புத்தன்ஹெலகல்வெட்டு)**

**அரச சபையும் நீதி மன்றங்களும் அரசனின் நிர்வாகத்திற்கு உதவின.**

**நீதித் துறை**

உயர் நீதி அதிகாரமும் அரசனிடமே காணப்பட்டது.

சபாவ , மஹலே போன்ற சொற்பிரயோகங்களால் நீதிமன்றங்கள் அழைக்கப்பட்டன.

**சபாவ – அநுராதபுர குருமஹத்தமண கல்வெட்டு**

**மஹலே –** காசியப்ப மஹலேகம் - **மெதிரிகிரிய எத்வெஹர கல்வெட்டு**

நாடு பல நிர்வாக அலகுகளாகப் பிரிக்கப்பட்டு நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டது.

உதாரணம் : நாகதீபத்தை நிர்வகித்த ரிஷிகிரி என்ற அமைச்சினால் அங்கு பியங்குக திஸ்ஸ என்ற விகாரை அமைக்கப்பட்டமை. (வல்லிபுர பொற்சாசனம் - வசப மன்னன்.)

பிரதேச நிர்வாகமும் இடம் பெற்றது.

உதாரணம் : தசகம் எக்தன் - பத்து கிராம பிரதானிகளின் சபை (களுதிய பொகுன கல்வெட்டு)

அரசுரிமை பிரதான 2 முறைகளில் பின்பற்றப்பட்டது.

தந்தை → மகன்

சகோதரன் → சகோதரன்

## வைத்தியத் துறை

நாட்டு மக்களுக்கத் தேவையான பொதுச் சுகாதார வசதிகளை வழங்குவதிலும் பண்டைய ஆட்சியாளர்கள் கவனம் செலுத்தினர்.

வெஜ்ஜசாலா - வைத்தியசாலை

வெஜ - வைத்தியர்

## வைத்தியத்துறைக்கு சேவையாற்றிய மன்னர்கள் சில

### புத்ததாஸ

வைத்தியசாலைகளை நிர்மாணிப்பதில் ஆர்வம் காட்டினான்.

### 5ம் மஹிந்த

வைத்தியசாலைகளுக்குத் தேவையான வசதிகளை வழங்கினான்.

### 4ம் காசியப்ப


காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நோயாளிகளுக்காக ' உபசக்க ரோக நாசக' எனும் தனியான வைத்தயைசாலைகளை நிறுவினான்.

### 1ம் உபதிஸ்ஸ

பஸவந்தி நாமசாலா என அழைக்கப்பட்டட பிரசவ விடுதிகளை அமைக்க நடவடிக்கை எடுத்தான்

### பண்டுகாபய

சொத்திசால என அழைக்கப்பட்ட பிரசவ விடுதிகளை அமைத்தான்.



# எமது புராதன மன்னர்கள் வெளிநாடுகளுடன் கொண்டிருந்த தொடர்புகள்

## ( வெளியுறவுக் கொள்கை)

பண்டைய இலங்கையர் அயல் நாடுகளுடனும் தூரநாடுகளுடனும் தொடர்புகளைக் கொண்டிருந்தனர்.

அயல் நாடுகள்

கிழக்காசிய நாடுகள்

அரபு நாடுகள்

ஐரோப்பிய நாடுகள்

உதாரணங்கள் : இந்தியா, பர்மா, அரேபியா, உரோம், கிரேக்கம்

**இவ்வாறான நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்புகளுக்கான சில உதாரணங்கள்:**

### 1ம் கஜபாகு மன்னன்

இந்தியாவின் சேர அரசின் பத்தினி தெய்வ கோவில் திறப்பு விழாவில் பங்குபற்றியமை.

### பாதிகாபயன்

கண்ணாடி மணிகளைப் பெற்றுவருவதற்காக உரோமுக்கு தூதுக்குழு ஒன்றை அனுப்பியமை.

### 6ம் அக்போ

சீன ராஜதந்திரிகள் 20 தடவைகள் இலங்கைக்கு வந்தமை.

### 1ம் விஜயபாகு

தனது தங்கை மித்தா இளவரசியை பாண்டிய இளவரசனுக்கு மணம்முடித்துக் கொடுத்தமை.

கலிங்க இளவரசி திரிலோக சுந்தரியை திருமணம் செய்துகொண்டமை.

# 4.2 பொருளாதாரம்

4.2.1 விவசாயம்

4.2.2வர்த்தகம்

4.2.3கைத்தொழில்

4.2.4ஏனைய தொழில்கள்




பண்டைய சமூகத்தவருள் பெரும்பாலானோரின் வாழ்வாதாரமாக விவசாயம் நிலவியது.

## சேனைப் பயிர்ச்செய்கை



பயிரிடப்பட்ட பயிர்கள்

- தானியங்கள்
- காய்கறி வகை
- கரும்பு
- பருத்தி



### மேட்டு நிலப்பயிர் செய்கை

கல்வெட்டுக்களில் - பிடபிம்

'புத்சரண' இலக்கியம் - செஹென்

உம்மக்க ஜாதக - சேன

என அழைக்கப்பட்டன.

நவதெனி சேன – தீயிட்டு புதிதாக உருவாக்கிய சேனை

கினியாதிகாவ – தீயிட முன்பு எழுப்பப்படும் ஒலி

கனத்த – கைவிடப்பட்டசேனை நிலம்

பெல – உயர் மரத்தில் கட்டப்பட்ட சிறு குடிசை

தண்டு வெட்ட – சேனையைச் சுற்றி அமைக்கப்படும் கம்புகளிலால் ஆன வேலி

கெதி அட, கெடுகனக – அறவிடப்பட்ட வரி

# நெற்பயிர்ச் செய்கை

சேற்று நிலப் பயிர்ச் செய்கை

நீர்ப்பாசனத்தின் மூலமே பெரும்பாலும் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

கெத, வயல் - நெற்செய்கைக்குரிய நிலம்

வயல் - சிறிய வயல்

கெத பல வயல்களைக் கொண்ட பரந்த நிலம்

பெரும் போகம், சிறு போகம் - நெற்செய்கை இடம் பெற்ற பிரதான போகங்கள்


தோணிகல கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள 3 போகங்கள்

சிறு போகம்

இடைப் போகம்

பெரும் போகம்





"விண்ணிலிருந்து மண்ணில் பொழியும் ஒரு துளி நீரையேனும் மனிதனுக்குப் பயன்படாது கடலில் கலக்க விடமாட்டேன்."

( மகா பராக்கிரமபாகு)

## மந்தை வளர்ப்பு

மாடு, ஆடு, கோழி ஆகிய கால்நடைகள் வளர்க்கப்பட்டன.

கோபாலகம் - இடையர்கள் வாழ்ந்த கிராமம்

கோபாலகர் - இடையர்

கிரி கெரி – பாலுக்காக வளர்க்கப்பட்ட பசுக்கள்


'பஸ்கோரச' என அழைக்கப்பட்ட 5 வகையான பாலுணவுகள் பெறப்பட்டன.


(தயிர் ,மோர், நெய், வெண்ணெய், பால்)

## 4.2.2 கைத்தொழில்

இலங்கையில், முன்வரலாற்றுக் கால தொடக்கத்தில் இருந்தே இரும்பு, களிமண் என்பனவற்றை மூலப்பொருளாகக் கொண்டு உற்பத்திகள் இடம்பெற்றன.

| கைவினைஞர்கள் | வரலாற்று மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விதம் |
|---|---|
| கம்மாளர் | கபர (முதுகல்லகல்வெட்டு) |
| பொற்கொல்லர் | துலாதார (மண்டகல கல்வெட்டு) |
| இரத்தினக்கல் பட்டை தீட்டுவோர் | மணிகர |
| யானைத்தந்த செதுக்கல் கலைஞர் | தடிக ( வேகிரிய கல்வெட்டு) |
| குயவர் | கும்பகார |
| நூல் நூற்பவர் | ததவய (வெஹெரகெம கல்வெட்டு) |





# 4.2.3 வர்த்தகம்

## உள்நாட்டு வர்த்தகம்

**புராதன வர்த்தக நகரங்கள்**

அநுராதபுரம் , மாகமம்

வணிஜ / வாபர

வியாபாரி

புகய / நியமஸ்தான

வர்த்தக சங்கம்

ததவய புகய

நூல் நூற்பவர்களின் சங்கம்

அபல வபர – புளி வியாபாரி

## வர்த்தகச் சட்டங்கள்

பதுளைத் தூண் கல்வெட்டு

(4ம் உதயன்)

சந்தையைக் கடந்து செல்பவர்களிடம் இருந்து வரி அறவிடப்படக் கூடாது.

திறந்த மண்டபங்களில் வெற்றிலை வியாபாரம் செய்யக் கூடாது.

போயா தினங்களில் வியாபாரம் செய்வோரிடம் இருந்து தண்டப் பணம் வசூலிக்கப்படும்.

அரச அதிகாரிகளினால் அனுமதிக்கப்படாத தராசு படிக்கல் என்பவற்றால் நிறுப்பது தடை.

## வெளிநாட்டு வர்த்தகம்

**புராதன வர்த்தகத் துறைமுகங்கள் சில**

மாந்தை – மன்னார்

கோகர்ண – திருகோணமலை

கொடவாய – அம்பாந்தோட்டை

**தென்னிந்திய வர்த்தகச் சங்கங்கள்**

நானாதேசி

ஐந்நூற்றவர்

வலஞ்சியர்

காம்போஜக மகா புகிய

ஆப்கானிஸ்தானியரின் பெரு வர்த்தக அமைப்பு





# ஏனைய தொழில்கள்

## ஆசார்ய

ஆசிரியர் / கலைகளில் நிபுணத்துவம் பெற்றவர்

ஹஸ்தி ஆசார்ய – யானையைப் பழக்குபவர்

அஸ்வ ஆசார்ய – குதிரை மீதேறிச் செல்வதைக் கற்பித்தல்

துனு ஆசார்ய – அம்பு எய்தும் கலையைப பயிற்றுவிப்பவர்

வெஜ – வைத்தியர்

மஹ வெதனா – முதன்மை வைத்தியர்


வொஹார – வழக்கறிஞர்

லபண / சிதகர – சித்திரக் கலைஞர்

கவி – கவிஞர்



உரு 4.10 சிகிரிக் குன்றில் தீட்டப்பட்டுள்ள அப்ஸரஸ்களின் உருவங்கள். இவை ஐந்தாம் நூற்றாண்டின் இலங்கையின் அரசவைக் கலையம்சத்தைக் காட்டுகின்றன. இக்காரிகைகள் மின்னலையும் முகிலையும் காண்பிக்கும் குறியீடுகள் என்பது ஆய்வாளர்களின்



சீகிரிய கிறுக்கல் கவிதைகள்

## 4.3 கலாசாரம்

### பௌத்த சமயம்

கி.மு 3ம் நூற்றாண்டில் மஹிந்த தேரரின் வருகையின் பின்னர் இலங்கையில் பௌத்த சமயம் பரவலடைந்தது.

- இலங்கையின் முதலாவது பௌத்த மன்னன்

  தேவநம்பிய தீசன்

- ஆரம்ப காலத்தில் பிக்குமார் வசிப்பதற்கு கற்குகைகள் தானமாக வழங்கப்பட்டன.
- உதாரணங்கள் : மிகிந்தலை , வெஸ்ஸகிரிய ,

  சீகிரியா , ரிடிகல



உரு 4.4. புத்த சமயம் இலங்கையில் அறிமுகமான காலத்தில் பௌத்த பிக்குகள் பக்தர்களால் தமக்குத் தானமாக வழங்கப்பட்ட கற்குகைகளிலேயே வாழ்ந்தனர். சற்று பிற்காலத்திலேயே பன்சலைகள், விகாரைகள் என்பன தோற்றம் பெற்றன.

| | | |
|---|---|---|
| பன்னசாலா | - | பன்சல |
| தேரர் | - | தலைமைப் பிக்கு |
| அந்தேவாசிப் பிக்கு | - | தலைமைப் பிக்குவின் கீழ் வாழ்ந்த பிக்குகள் |
| சதிவிஹாரிய | - | மாணவப் பிக்குகள் |

வலகம்பாகு மன்னனின் ஆட்சிக்காலத்தில் திரிபிடகம் நூலுருப்படுத்தப்பட்டது.



உரு 5.7 நீண்ட காலமாக வாய்மொழி மரபாக இருந்த திரிபிடகம் தொடர்ந்தும் அந்நிலையில் இருப்பதன் பின்விளைவை உணர்ந்த வலகம்பா மன்னன் மாத்தளையிலுள்ள அலுவிகாரைக்குப் பிக்குகளை வரவழைத்து அதனை எழுத்துருப் பெறச் செய்தமை.

| | | |
|---|---|---|
| பாணக | – | திரிபிடகத்தை மனனம் செய்த பிக்கு |
| நிகாய | – | திரிபிடக பகுதிகள் |
| தீக பாணக | – | தீக நிகாயவை மனனம் செய்த பிக்கு |
| சங்யுத்த பாணக | - | சங்யுத்த நிகாயவை மனனம் செய்த பிக்கு |
| வசவசிக | – | மழைக் காலத்தில் பாதுகாப்பாக தங்கியிருத்தல் |

# ஏனைய சமயங்கள்

அநுராதபுர நகரிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் பிராமணிய மக்கள் வாழ்ந்துள்ளனர்.அவர்கள் இந்து சமயத்தவர் ஆவர்.

சீவகசாலா – சிவலிங்கம் பிரதிஸ்டை செய்யப்பட்ட இடம்

தமெட – தமிழ் வியாபாரிகள்

புராதன துறைமுகங்களுக்கு அண்மையில இந்துக் கோவில்கள் அமைந்திருந்தன.

கோகர்ண – திருக்கோணேஸ்வரம்

மாந்தை – திருக்கேதீஸ்வரம்

சிலாபம் - முன்னேஸ்வரம்

அநுராதபுரத்தில் வாழ்ந்த பாரசீக வியாபாரிகளைப் பற்றிய தகவல்களை தேச சஞ்சாரியான கொஸ்மோஸ் இண்டிகொப்லேடஸ் வழங்கியுள்ளார்.

அவர்கள் கத்தோலிக்க சமய நெஸ்டோரியா சமய பிரிவினர் ஆவர்.

சிலுவை அடையாளத்துடன் கூடிய கற்றூண் ஒன்று அநுராதபுரத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.





உரு 4.6. பொலன்னறுவையில் காணப்படும் புராதன சிவன் கோயில்

கி.பி .9ம் நூற்றாண்டின் பின்னர் இஸ்லாம் சமயக் கருத்துக்களும் இலங்கையில் பரவியது.

கிதாப அல் மஸ்லிக் வல் மமாலிக் - இலங்கை செரண்டிப் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அஜாயிஸ் அல் ஹிந்த் - இப்னு சஹ்ரியர் என்பவரின் நூல்

அல் பலசூரி - இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.



உரு 4.8. அராபியர்களுக்கு உரித்தான புதைக்குழி கல் ஒன்றில் செதுக்கப்பட்டுள்ள கல்வெட்டு. இதில் காணப்படுவது கியுபிக் அரபு எழுத்துக்களாகும்.

## 4.3.3 கல்வி

கல்வியின் மத்திய நிலையமாக விகாரைகள் விளங்கின

மகா விகாரை ∴ அபயகிரி விகாரை என்பன சர்வதேச பௌத்தகல்வி நிலையங்களாக விளங்கின.

புத்தகோச தேரர் மகா விகாரையில் கற்றவர்.

‘கலை பற்றிய அறிவு இல்லாதவர் வாசமற்ற காட்டுப் பூவிற்கு ஒப்பாவார்.’

---லோகோபகாா ---

## 4.3.4 இலக்கியமும் இரசனையும்

இயற்கையோடு இணைந்த வாழ்வும், பௌத்த படிப்பினையால் பெற்ற அறிவும் புராதன சமுகத்தில் உதார குணத்துடனான இரசனை வளர்ச்சியடைய வழிவகுத்தன.

### பாளி மொழி :

| | | |
|---|---|---|
| தீபவம்சம் | அபிதானா பிரதீப்பிக்கா | சாராபிரதீப்பதி |

### சமஸ்கிருதம் :

| | | |
|---|---|---|
| ஜானகிஹரணய | பாலவதபோதன | அனுருந்த |

### சிங்களம் :

| | | |
|---|---|---|
| சியபஸ்லகர | சசாந்தாவத்த | முவதே உதாவத்த |

## 4.3.5இணங்களுக்கிடையிலான இணக்கப்பாடு

இனங்களுக்கிடையிலான பன்முகத்தன்மை காணப்பட்ட போதிலும் பண்டைய சமூகத்தினர் தமக்கிடையே குழப்பங்களை ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்பது முன்மாதியாகும்

- தமிழர் ஒருவர் பௌத்த குருவாக இருந்தமை.
- சிங்களவர்களும் தமிழர்களும் திருமணத் தொடர்புகளைக் கொண்டிருந்தமை.
- அரச சபையில் தமிழ் அதிகாரி என்ற பதவி இருந்தமை.
- 1ம் விஜயபாகு தலதாமாளிகையின் பாதுகாப்பிற்கு தென்னிந்திய அகம்படிச் சேனையை நியமித்தமை.
- தென்னிந்திய வர்த்தகர்கள் இலங்கையில் வாழந்தமை.
- இலங்கையின் சகல சமயத்தவரும் சிவனொளிபாத மலையைத் தரிசிக்கச் சென்றமை.
- சுலைமான் என்ற வர்த்தகர் ˙ சிவனொளிபாத மலையைத் தரிசிக்க வந்தமை.

**PRESENTED BY MRS. M.N.S NIFARA**

**TEACHER OF KG/DEHI / AL- AKEEL M.M.V**